2014 ஆகஸ்ட் 11] [திருமதி பா. வளர்மதி]

வேண்டிய அவசியம் இல்லை. குறைந்த எண்ணிக்கையில் உள்ள திருநங்கைகளுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிகமான நிதியுதவி அளித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகளும் தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களும் படித்துக்கொண்டிருக்கிறார்கள், சுய தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் சொந்த வீடுகளில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கென தனித் துறை அமைக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் அவர்களுக்கு தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர், செல்வி கே. பாலபாரதி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, திருநங்கைகள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக அரசு இன்னும் பல உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார். திருநங்கைகளுடைய தேவையறிந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை அவர்கள் நாடுவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு அவர்களுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்தோடு, கடமையுணர்வோடு, கடமையில் தவறாத காவியத் தலைவி; நாடு முழுவதும் நல்லவர்களும், நன்றிமிக்கவர்களும், நாட்டின்மீது அக்கறை கொண்டவர்களும், நாளேடுகளும், பாராட்டுகின்ற, போற்றுகின்ற, நல்லாட்சிக்கு நற்சான்றாக (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்தில் 37 இடங்கள் கிடைக்கச் செய்த, நாளைய தலைமுறைக்கும்

வாழ்வளிக்கும் வரலாறாக வாழும் (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளும் நல்லவர்; நாடு நலம்பெற நாளும் உழைப்பவர்; வாக்குறுதிகளுக்கெல்லாம் வளம் சேர்ப்பவர்; வையகம் முழுவதும் புகழ்பெற்றவர்; ஜகத்தின் மகத்தான முதல்வர்; அன்னையாய், ஆசானாய், தெய்வமாய் காத்துவரும் இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013–2014 ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரண்டாவது மற்றும் பதின்மூன்றாவது (பதினான்காவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–45

3. அறிவிப்புகள்–*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*